**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 70/2025PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜா முகம்மது | த–பெ /க.பெ. | ஜமால் |
| ஊர்: | : | காரைக்குடி | சமய ம்: | |
| வயது: | : | 42/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வியாபாரம் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.04.2026**

---------------------------------------------------------------------------------------------------

**16.04.2026**

**முதல் விசாரணை:**

**1)** நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

கடந்த 10.10.2024–ம் தேதியிட்ட கரூர் வைஸ்யா வங்கி, காரைக்குடி கிளை **காசோலை (காசோலை எண் 000184) அசல் ம.சா.ஆ.1 ஆகும்.** கடந்த 25.10.2024 தேதியில் ம.சா.ஆ.1 போதிய தொகை இல்லை என்ற குறிப்புடன் திருப்பப்பட்ட **ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ.2 ஆகும்.** கடந்த 23.11.2024 ம் தேதியன்று இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட **சட்ட அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.3 ஆகும்.** கடந்த 23.11.2024 அன்று எதிரி அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பின் **அஞ்சலக ரசீது அசல் ம.சா.ஆ. 4 ஆகும்**. கடந்த 04.12.2024 ல் எதிரி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பபப்பட்ட **அஞ்சலக கவர் அசல் ம.சா.ஆ. 5 ஆகும்.** கடந்த 16.04.2024 அன்று புகார்தாரர் மற்றும் எதிரிக்கு இடையே ஏற்பட்ட **ஒப்பந்த பத்திரம் அசல் ம.சா.ஆ.6 ஆகும்.** கடந்த 10.10.2024 தேதியிட்ட **கடன் உறுதிமொழி பத்திரம் அசல் ம.சா.ஆ. 7 ஆகும்.** மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை – ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.16 18:26:57 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)